மனமிசைந்து ஏவி
மங்கையர் நாடும் ஒரே
★ புடைவை விதாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள், நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

பட்டுச் சாறிகள்
பட்டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
பெரியவர்களுக்கும் புதிய
டிசைன் புடைவைகளை
தெரிவுசெய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 06 வியாழக்கிழமை (22 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 299

வடபகுதிக்கு மின்சாரம் வழங்க பாதுகாப்பு அமைச்சு முட்டுக்கட்டை

திருத்த வேலை உபகரணங்கள் எடுத்துவர அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 22

வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ள போதிலும், பாதுகாப்பு அமைச்சு அதற்கு முட்டுக் கட்டை போடுகிறது.

வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மின்சக்தி அமைச்சர் அனுருத்த ரத்வத்த இலங்கை மின்சார சபைக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஆனால் மின்சாரத்தை வழங்குவதற்கான திருத்த வேலைகளைச் செய்வதற்கும், மின்சார உற்பத்திக்கும் தேவையான தொழில் நுட்ப உபகரணங்களை வடக்கே எடுத்து வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சு இன்னும் அனுமதி வழங்கவில்லை'

மின்சக்தி அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் பணிப்புரையின் பேரில், வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஒழுங்குகளை ஆராய்வதற்காக மின்சாரசபையின் பொது முகாமையாளர் ஆன்மையில் உயர்மட்ட மாநாடு ஒன்றை நடத்தினார்.

அந்த மாநாட்டில், வடக்குக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகளைத் தொடர்குவது சம்பந்தமாக ஆராய்ந்த பின் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

பிரதேசப மாநாட்டில் மின்சாரசபையின் வடபிராந்திய முகாமையாளர் திரு. விராஜேந்திரனும் கலந்து கொண்டார்.

மாநாட்டைத் தொடர்ந்து மின்சார சபையின் பொறுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மாகாண சபை உறுப்பினர் பதவிப்பிரமாணம்

கொழும்பு, செப். 22

சப்பிரகமுவ மாகாணசபை உறுப்பினராக பெருமாள் பிள்ளை பாலசுப்பிரமணியம், ஆளுநர் ஈ.எல். சேனநாயக்கா முன்னிலையில் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். (ஒ-4)

அமைச்சருக்கு பிணை வழங்க பதுளை நீதிமன்றம் மறுப்பு

கொழும்பு, செப். 22

கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக மின் கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதி அமைச்சர் சமரவீர விரவன் பிணையில் விடுவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை பதுளை மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்தது.

இம்மனுவை பிரதி அமைச்சரின் மனைவி தாக்கல் செய்திருந்தார். (உ-ஏ-9)

ஹமில்டன் வனசிங்கா மன்னிப்பு கோரவேண்டும்

ஒய்வு பெற்ற தளபதிகள் கோரிக்கை

கொழும்பு, செப் 22

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தங்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்று ஒய்வுபெற்ற படைத் தளபதிகள் மற்றும் ஒய்வு பெற்ற பொலீஸ்மா அதிபர் ஆகியோர் பாதுகாப்புப் பிரதி அமைச்சரைக் கேட்டுள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலின் போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு உதவும் இலைப்பு திகாரிகளாகப் பணியாற்ற, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவால் நியமிக்கப்பட்டிருந்த முன்னாள் கிராமப்பட்டத் தளபதிகளான பேரில் குணசேகரா, படிமென்டிஸ், ஹரிகுணதிலக, முன்னாள் இராணுவ சட்ட ஆலோசகரி கேணல் டபிள்யு. எச். நிசியெல்ல, முன்னாள் பொலீஸ் மா அதிபர் அனாசென்விரத்னா ஆகியோரே பிரதி அமைச்சருக்கு இது தொடர்பாகக் கடிதம் எழுதியுள்ளனர்.

இணைப்பாளர்களாகத் தாங்கள் பணிபுரிவதற்கு உதவவேண்டாம் என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் வனசிங்க முப்படைகளின் தளபதிகளுக்கும் பொலீஸ்மா அதிபருக்கும் உத்தரவு பிறப்பித்ததன் மூலம் தங்களை அவமானப்படுத்திவிட்டார் என்பதே ஒய்வுபெற்ற தளபதிகளின் குற்றச்சாட்டாகும்.

(இ ஏ)

இனப் பிரச்சினைக்குத் தீர்வு:

அரசின் அணுகு முறையை வரவேற்கிறார் பிரி, தூதுவர்

கொழும்பு, செப். 22

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக புதிய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை இங்கிலாந்துக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜோன்பிரிட் வரவேற்றுள்ளார்.

அரசாங்கத்தின் முதலீட்டுக் கொள்கைகள் பற்றி பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா அமைச்சர்களுடன் கலந்துரையாடினார்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளரான சூப்பிரீம் விக்கிரமரத்தினா என்பவரை கம்பியால் தாக்கிக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வழக்கு இம் மாதம் 28 ஆம் திகதி பதுளை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

(உ-ஏ-9)

ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. சார்பில் இருவர்?

கொழும்பு, செப். 22

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மீட்பு முன்னணியின் வேட்பாளராக அஜித்குமார போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் ஒரு பிரிவின் பொதுச் செயலாளராக இவர் இருந்து வருகிறார்.

தேசிய மீட்பு முன்னணியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான ரீஹான் கலபதி இதனை வெளியிட்டார்.

இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதை தொடர்ந்து —

தாடானுமன்றக் கட்டடத்தில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் நடைபெற்ற ஐ.தே.க பிரமுகர்களின் கூட்டம் ஒன்றில் இடம்பெற்ற சிறேனட் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அஜித்குமார முதலாவது எதிரியாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் —

ஜனாதிபதித் தேர்தலில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மாஹோ கப்பலில் முத்திரைகள்!

யாழ்ப்பாணம், செப். 22

மாஹோ கப்பலில் ஆயிரம் ரூபா, 500 ரூபா, 100 ரூபா பெறுமதியான முத்திரைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ். பிரதம தபாலகத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

கப்பல் தாக்குதல் சம்பவம்

சமாதான பேச்சில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தாது

கேணல் ரத்வத்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 22

மன்னார் கற்பிட்டி கடலில் விடுதலைப் புலிகள் கடற்படை மோர்க் கப்பலை தாக்கிய சம்பவம், சமாதான பேச்சு நடத்துவதற்கு அரசின் நிலைப்பாடு மாற்றம் எதனையும் ஏற்படுத்திவிடாது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் பெரும் இழப்பை ஏற்படுத்தினாலும், நாட்டின் நன்மை கருதி அமைதிப் பேச்சுவார்த்தையை குலைக்க நாம் அனுமதிக்கக்கூடாது என்றும் அமைச்சர் கூறினார். (ஒ-4)

சிலாவத்துறை கடலில் கடற்புலிகள் ஆதிக்கம்

கொழும்பு, செப். 22

மன்னார் - சிலாவத்துறை கடலில் கடற்புலிகள் தான் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்

பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஜலன்க நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது சிலாவத்துறையில் இருந்து இராணுவம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளியேறியது.

தற்போது கற்பிட்டியில் கடற்படை முகாம் ஒன்று இருந்தும் அது குறிப்பிட்ட கடற்புலிகள் கணக்கெடுப்பதில்லை. கடற்படையினரிடம் இருந்து நழுவிச் செல்வதற்கு கடற்புலிகள் பல என்ஜின்கள் பொருத்தப்பட்ட — நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட — அதிவேக படகுகளை பயன்படுத்துகின்றனர் என்றும் 'ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்களை அடுத்து

இராணுவம், பொலீஸ் ஏறாவூரில் குவிப்பு!

மட்டக்களப்பு, செப். 22

ஏறாவூர்ப் பிரதேசத்தில் இடம்பெற்று வந்த வன்முறைச் சம்பவங்களை அடுத்து அங்கு மேலதிகமாக இராணுவத்தினரும் பொலீஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்

பொதுத் தேர்தலைத் தொடர்ந்து எட்டு ஆதரவாளர்கள் இடையே இடம்பெற்று வந்த வன்முறைகளை அடுத்தே மேலதிக இராணுவம் அங்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

அரசமைப்பை திருத்துதல்: ஆராய்வதற்கு தெரிவுக்குழு

கொழும்பு, செப். 22

அரசமைப்பில் திருத்தம் கொண்டு வருவது குறித்து ஆராய்வதற்காக 19 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது.

இது தொடர்பான பிரேரணை ஒன்றை புதிய அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. பிரேரணை நேற்று ஆங்கீகரிக்கப்பட்டது.

தற்போதைய அரசமைப்பில் திருத்தம் கொண்டு வருவது அல்லது அதனை முற்றாக மாற்றியமைப்பது ஆகியவை குறித்து மேற்படி தெரிவுக்குழு விசாரித்து உரிய சிபார்சுகளை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும்

திறமேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது குறித்தும் தெரிவுக் குழு ஆராயும்

தெரிவுக்குழுவின் தலைவர் மற்றும் அதில் இடம்பெறும் உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர் விரைவில் சபாநாயகர் அறிவிப்பார். (ஏ-4)

ராவின் வற்புறுத்தலால் இலங்கைத் தூதர் வாபஸ்

பொனாட்டின் இடத்துக்குப் புதியவர்

புதுடில்லி, செப். 22

பிரதமர் நரசிம்மராவின் வற்புறுத்தலுக்கு இணங்க, இலங்கை தூதராக இந்தியர் ஒருவர் பதவி ஏற்ற திரு பொனாட் நி-கரத்தினாவை திருப்பி அழைக்க பிரதமர் நரசிம்மராவ் இணங்கியதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

சந்திரிகா பிரதமராக பதவி பெற்ற சில தினங்களில் நரசிம்மராவின் விசேட தூதராக அவரது தலைமைச் செயலாளர் திரு. ஏ. எல். வர்மா கொழும்பு வந்தார் அவர் சந்திரிகாவைச் சந்தித்து இந்தியப் பிரதமரின் நல்வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், பொனாட் நிலகரத்னாவை இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டது குறித்த கவலைகளையும் தெரிவித்தார்.

பொனாட் நிலகரத்னா இந்திய எதிர்ப்பாளர் என்பதே பிரதமர் நரசிம்மராவ் தமது எதிர்ப்புக்குத் தெரிவித்த காரணமாகும் என்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

பிரதமர் நரசிம்மராவின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே 60 வயதுக்கு மேற்பட்டவர்களை ராஜதந்திரிகளாக நியமிப்பதில்லை என்ற முடிவை பிரதமர் எடுத்ததாகவும்—

அந்த தீர்மானத்தின் கீழ் பொனாட் நிலகரத்னா திருப்பி அழைக்கப்படுகிறார் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-ஏ)

பிரதமரின் தடையை மீறி

யுத்த டாங்கிகள் வாங்க ஜனாதிபதி டி.பி. அனுமதி!

கொழும்பு, செப். 22

பிரதமர் சந்திரிகாவின் கொள்வனவு செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்ட யுத்த டாங்கிகளை, பிரதமரின் தடையையும் மீறி கொள்வனவு செய்வதற்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க அனுமதி வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்தினதோ அல்லது நிதியமைச்சினதோ அனுமதியின்றி 365 கோடி ரூபாவுக்கு மேற்கொள்ளப்படவிருந்த இந்தக் கொள்வனவுக்கு பிரதமர் தடைவிதித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதி விஜேதுங்க தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி கொள்வனவுக்கு அனுமதி வழங்கியிருப்பதாகவும்—

இது ஜனாதிபதிக்கும் பிரதமர் தலைமையிலான ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கும் இடையில் முரண்பாட்டைத் தோற்றுவித்திருப்பதாக கொழும்புச் சஞ்சிகை ஒன்று தெரிவித்தது

மேற்படி யுத்த டாங்கிகள் போரைய யுத்தத்துக்குப் பயன்படுவது என்றும்—

அதில் பல குறைபாடுகள் உள்ளன என்றும்—

இராணுவ நிபுணர்கள் குறை கூறியிருப்பதாகவும் அச் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

(உ-4)

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழான

தடுப்பு முகாம்களை மூடிவிட பாதுகாப்பு அமைச்சு முடிவு

கொழும்பு, செப் 22

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தடுப்பு முகாம்களை மூடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான உத்தரவு உரிய அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

பொலீஸ் பிரிவினாலும் இராணுவ முகாம்களிலும் பல தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. கடந்த ஆண்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் 343 தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-4)

யுத்த நிறுத்தத்திற்கு

படை விலகுமாறு நிபந்தனை புலிகள் விதிக்கமாட்டார்கள்

சமுகமான சூழ்நிலையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு யுத்தநிறுத்தம் அவசியம் அதற்காக இராணுவம் தற்போது இருக்கும் நிலைகளில் இருந்து விலகவேண்டும் என்ற நிபந்தனையை நாம் விதிக்கப்போவதில்லை.

— இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாக ஏ. எல். பி செய்தியாளர் அமல் ஜெய

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி மூளி

குடாநாட்டில் திலீபன் நினைவுநாள் உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று ஏழாவது நாளாக குடாநாடு எங்கும் மிகவும் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லூரில் நேற்று நடந்த அடையாள உண்ணாவிரதத்தில் வழமையை விட அதிக அமைப்புகள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் பொது மக்களும் பங்கு பற்றினர்.

யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி, யாழ். சண்முகா வித்தியாலயம், யாழ்.புனிதமரியாள் வித்தியாலயம், நல்லூர் செட்டி வீதி தெரு மெதடிஸ்த பாடசாலை, கொக்குவில் நாமகள் வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மாணவர்கள், [illegible] கல்லூரி உறுப்பினர்கள், யாழ் கூட்டுறவுச் சங்க அச்சகப் பகுதி உறுப்பினர்கள் சோண்டாவில் தெற்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், அரியாலை தெற்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கம் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், [illegible] மாணவர்கள் [illegible] கல்லூரி உறுப்பினர்கள்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

எங்கும் எழுச்சிக் கீதங்கள்

Digitized by Noolaham Foundation.
http://noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நடுப்பு ஊசி ஏற்றப்பட்ட நல்ல இன கோழிக்குஞ்சுகள், அடை முட்டைகள் விற்பனைக்கு உண்டு. செல். யூத் மோட்டேர்ஸ், 382, மணிக் கூடு வீதி, யாழ்ப்பாணம், வெலிங்டன் சந்தியடி.
(32984)

நீரிழிவு நோயாளிகள் பாவிக்கக் கூடிய ஆட்டமா, குரக்கன் மா, ஓடியல் மா, கழுத்து மா எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில்.
(சி-9195)

உடன் விற்பனைக்கு

Hyline வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், டிறொயிலர் கோழிகள் விற்பனைக்குண்டு. நா. ஸ்ரீகாந்தன், இல: 703, கே. கே. வீதி, கிளிங்டன்புளியடி, யாழ்ப்பாணம்.
[32977]

தேவை

அனுபவமும், நிறமையும் உள்ள விற்பனையாளரும், உதவியாளர்களும் தேவை; உதவியாளர் வயதில் குறைந்தவர்கள் விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்வதும். வாழ். நுகர்வோர் காட்சியகம், இல. 441, காங்கேசன்துறை வீதி [சிவன் கோயிலடி வடக்கு வீதி], யாழ்ப்பாணம்; [32965]

தமிழில் பில் எழுதி புடவை வியாபாரம் செய்யக்கூடிய பெண்பிள்ளை ஒருவர் தேவை. நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை அன்சன்ஸ், இல 81, மக்கள் நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்;
(32975)

நடன முருகன் வைத்திய நிலையத்தில் தாதியராக கடமையாற்றக்கூடிய பெண்பிள்ளை தேவை. வாழ். மாநகர எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: நடன முருகன் வைத்திய நிலையம், சந்திரன் சந்தி, யாழ்ப்பாணம். (32997)

மணிக்கூடுகள் தேவை

உதிரிப்பாகங்களுக்காக பாவித்த நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். சுவர் மணிக்கூடுகள், ரேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டிக்கா வாச்சுன் ரேடியோ வேக்கஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆதிகுணம் சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. கண்டி வீதி, சாவகச்சேரி.
[சி 9044]

புறொயிலா குஞ்சுகள்

பத்து நாட்கள் வளர்ச்சி யடைந்த பிறிமா புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம்
(32992)

சோதிடம்

சக்தியில் சிறந்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப்பாடங்கள் த. கிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், ஸ்ரான்லி வீதி [ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக], யாழ்ப்பாணம். தினமும் காலை 8-30 — 12 30 தலைமை 354, கோம்பேவீதி, நல்லூர் வடக்கு. பிறிமகல் 3.00 — 6-00. [32969]

A/L - 95

A/L 95 பரீட்சைக்கு உதவியாக வெளிவந்து விற்பனையாகின்றது A/L வகுப்புக்குரியது. மனித உயிரியல் Human Biology) உயர்தர, விலங்கியல் (பரீட்சை வழிகாட்டி) ஆக்கம் M. P. Sellavel B. sc. சிறைறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஸ்ரீ காந்த்புத்தகசாலை, வாழ். நல்லூர். (சி/9177)

TOEFL

TOEFL- Tapes Notes Study Materials Etc. Required. Contact-
Director
School of Business Administration
16, 3rd Cross Street, Jaffna.
(சி-9206)

மனைப் பொருளியல்

ஆண்டு-7 தொடக்கம் 10 வரையிலான பாடத்திட்டத்திற்கு அமைந்தது. ஆக்கம்: ஆர். அழுப் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.
(சி-9156)

இலகு திருமண சேவை

36 வயதுடைய அனுஷம் 2ஆம் காலை, செவ்வாய் 12 இலும், சுவிஸில் வேலை செய்யும் மணமகனுக்கு சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனியில் உள்ள மணமகள் தேவை; து. விமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி.
(32993)

மணமகள் தேவை

லண்டன் பிரஜா உரிமை பெற்ற என்ஜினியராக கடமையாற்றும் 36 வயது, ரேவதி நட்சத்திர மணமகனுக்கு மணமகள் தேவை. விபரமும் தொடர்பு கொள்ளவும். இல. 695, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(32998)

வகுப்புகள்

Yogi Home(Science Academy கேக் ஐசிங், மாச்சிவி மலர்கள் (Sugar Craft) மேனாத்தேய ஐசிங் (Fondant Icing), சமையற்கலை, ஒப்பனைக் கலையும், தலை அலங்காரமும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: இல. 71B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர்.
(32996)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 95
மிட்டல் வகுப்புகள்
பௌதீகம்: ஜெயசேன்
இரசாயனம் சிறிதரன்
ஆரம்பம்:
23 - 09 - 1994
4-00p. m.
(சி/9196)

அன்னை வேளாங்கண்ணி

அளம்பில் அன்னை வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா திருப்பலி எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.
[7920]

உடுவில் மகளிர் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

G. A. Q. - 95
யாழ்ப்பாணம் / பேராதனை

எல்லாப் பாடங்களுக்குமான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

ENGLISH - LITERATURE
ஆரம்பம்: 01 - 10 - 1994
3 மணி

— பதிவாளர்.
[சி-9143]

SCIENCE CENTRE
KARAVEDDY

SPOKEN ENGLISH WITH GRAMMAR
திரு. பஞ்சாட்சரம்
ஆரம்பம்: வெள்ளி 23-09-1994
காலை 10 மணிக்கு
[32991]

31ஆவது நினைவு தினம்

மண்ணில்: 01 09 1916
விண்ணில்: 23 08 1994

வைரமுத்து தேவதேசன் சின்னத்துரை
(ஓய்வு பெற்ற அதிபர்)

"எங்கள் ஐயா! இதுவரை காலமும் எம்மோடு சிரித்துப் பேசி நல்வழிப்படுத்திய எங்கள் குலவிளக்கே! உங்கள் பிரிவைத் தாங்காது கண்ணீர் மல்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகளுக்கு இவ்வார் ஆறுதல் சொல்வார்!"

இன்று (22 09-1994) வியாழக்கிழமை காலை 11-30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ள நன்றி செலுத்தும் ஆராதனையில் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பில்
J. S. கிறிஸ்ததாஸ்
(ஆசிரியர்).
தேவகுமாரன்
(சு. [illegible])

"தங்கமாலி",
அரியாலை
[32993]

விற்பனைக்கு

சகல அளவுகளிலும் பொலித்தீன்தாள், சொப்பிங் பாக், நயிலோன் கயிறு, பினாஸிரிக் ஜக், பினாஸிக் வாட்டர்ஜக், பினாஸ்டிக் பேனி, கோழிக்கூடுகளான இரும்புவலை, அலுமினியத் தாச்சி, எனாமல் பெயின்ற மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

நாதன் களஞ்சியம்,
219.C ரேணல் பிட்டு சாலை,
மருதடிவளவு வீதி,
யாழ்ப்பாணம்.
(32967)

குணம் வீடியோ சென்ரர் வாடிக்கையாளர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்

எமது நிலையத்தில் 10-09-94க்கு முன்பு வாடகைக்கு எடுத்த சினிமா திரைப்படங்கள் நிறைய திரும்பி வரவில்லை என்பதையும் அதை வாடகைக்கு எடுத்தவர்கள் யாராயினும் அந்தப் படங்களை உடனே எங்கள் நிலையத்தில் கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம். அப்படி ஒப்படைக்க தவறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம் அத்துடன் எடுத்த படங்களை எங்களிடம் தராமல் வைத்திருந்து பார்க்கும்போது பிடிபட்டால் அதற்கும் நாங்கள் பொறுப்பாவிர்கள் அல்ல: ஆகவே உங்கள் நன்மை கருதி படங்களை உடன் ஒப்படையுங்கள்.

— உரிமையாளர்.

குறிப்பு:- படங்களை ஒப்படையுங்கள் அதற்குரிய வாடகைப் பணம் அறவிடப்படமாட்டா.

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-9197)

பாவியுங்கள்

அண்ணா பற்பொடி அண்ணா ரொபிகள்

அண்ணா பற்பொடியின் பாவித்த வெற்றுப் பக்கட்டுகளில் 25 அல்லது நீங்கள் சுவைத்து சாப்பிடும் அண்ணா ரொபி களின் 50 பேப்பர்களையோ கொடுத்து 1 அப்பியாசக் கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

● பெற்றுக் கொள்ளுமிடங்கள்:

அண்ணா தொழிலகக் கிளைகள்:
இணுவில், யாழ்ப்பாணம், தீருநெல்வேலி.

அண்ணா தொழிலகம்
இணுவில்.
[சி-9198]

FOR SCHOOL SOCIETY AND THE ASSOCIATION SPECIAL PRO VERITATE ET JUSTITIA

பற்றீஷன்
தொழிற் பயிற்சி நிறுவனங்கள்
PATRICIAN INSTITUTES

தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள்

வார இறுதி நாள் வகுப்புக்கள்
01 - 10 - 1994 சனிக்கிழமையும்

வார நாள் வகுப்புக்கள்
28 - 09 - 1994 புதன்கிழமையும்
ஆரம்பமாகும்

1. Computer Processing Courses:
   - BASIC
   - WORD PROCESSING
   - LOTUS 1 - 2 - 3
   - d BASE III PLUS
2. Civil Draughtsmanship and Quantity Surveying
3. Book Keeping and Accounts
4. English Classes
5. Short-Hand and Typing (English)
6. General Motor Mechanism
7. Electrical Wiring
8. Motor Rewinding
9. General Electrician

★ மேற்படி பயிற்சி நெறிகளைப் பயில விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெற்று உடன் பதிவு செய்து கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:
REGISTRAR,
PATRICIAN INSTITUTES,
59, St. Patrick's Road,
Jaffna.
[9204]

சைக்கிள் ஓட்டப் போட்டி

அளவெட்டி அருணோதயக் கல்லூரி
நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தும்
ஆண்களுக்கான 5 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி
காலம்: 01-10-94 சனிக்கிழமை காலை 6-30 மணி
இடம்: அளவெட்டியில் உள்ள அருணோதயக் கல்லூரி வாயில்
பிரவேசக்கட்டணம்: ரூபா 50/-
விண்ணப்ப முடிவு திகதி: 28 - 09 - 1994
தொடர்பு கொள்க:
அருணோதயக் கல்லூரி,
(தற்போது இராமநாதன் கல்லூரியில்)
மருதனார்மடம்.
இ. யோ. லெஸ்லி.
அமைப்பாளர்.
[33000]

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து

மனோன்மணி அம்பாள் ஆலயம் சங்காபிஷேகமும் (1008) நவசக்தி அர்ச்சனையும்

காலம்: 23 - 09 - 94 வெள்ளிக்கிழமை
காலை 8 மணி முதல் 11-30 வரை
12-00 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.
அடியார்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
ஆலய பரிபாலன சபை
[33010]

இணுவில் கிழக்கு
மாணிக்கவைரவர் தேவஸ்தான

மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் பாராட்டு விழாவும்

காலம்: 23-09-1994 வெள்ளிக்கிழமை
காலை 9.30 மணிக்கு:
சங்காபிஷேகம், விசேட பூசை இடம்பெறும்.
மாலை 6.00 மணிக்கு: சொற்பொழிவு
இரவு 7.00 மணிக்கு: கந்தபுராணம் பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய
திரு. செ. சத்தியமூர்த்தி (B.Sc.)
அவர்களுக்கு "புராணக்கலாநிதி" என்னும் பட்டம் வழங்கி அறிஞர்கள், பெரியோர் பாராட்டுரை நிகழ்த்துவர்.
இரவு 8.00 மணிக்கு:
பஞ்சமுகார்ச்சனை இடம்பெற்று எம்பெருமான் வீதியுலா வருவார்.
இரவு 9.00 மணிக்கு:
இன்னிசை வேந்தர்
பொன். சுந்தரலிங்கம் அவர்களது
இன்னிசைக்கச்சேரி இடம்பெறும்.
அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
விழா உபயகாரர்கள்
(33006)

நினைவஞ்சலி

அண்மையில் இயற்கை எய்திய சத்திரசிகிச்சை நிபுணர்
வைத்திய கலாநிதி எம். பொன்னம்பலம்

அவர்கள், இவ்வைத்தியசாலை, தெல்லிப்பழையில் இயங்கிய காலத்தில் அங்கு எம் மக்களுக்கு ஆற்றிய சேவையை நினைவு கூர்ந்து, அவரின் பிரிவை எண்ணி துயருறும் அவரது குடும்பத்தின் வேதனையில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
மாவட்ட வைத்தியசாலை,
தெல்லிப்பழை,
தேசியமேம்பாட்டுக் வைத்தியசாலை,
மானிப்பாய்.
(33004)

கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் வடக்கு
கிராமிய உற்பத்திக் குழுவின் தலைவராகக் பல்லாண்டு காலம் வீயத்தகு பணி புரிந்த

தியாக புருஷர்
அமரர் க. சிவஞானம் அவர்கள்

இறப்பதும் எய்யமை குறித்த கண்ணீர் எமது அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

* * *

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று இறைவன் திருவடிகளை வேண்டி கொண்டு, அவரது மனைவி, மக்கள், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிராமிய உற்பத்திக் குழுவினரும்
உரும்பிராய் வடக்கு வாழ் மக்களும்
[33015]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆறப் போடுதல் ஆகாது அரசே!

மட்டக்களப்பு, நெடுஞ் சேனப் பகுதியில் கடந்த சனிக்கிழமை — பதினெழாம் திகதி — அரச படையினர், விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றைக் கற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தினர். இராணுவத்துக்கு உதவியாக வான் படையும் செயற்பட்டது. இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தோராயமாக எட்டுப் பேரும், ஆதரவாளர்கள் இருவரும் உயிரிழந்தனர். சந்திரிகா தலைமையிலான புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்ட பின்னர் படையினர் நடத்திய குறிப்பிடத்தக்க தாக்குதல் என்று பாதுகாப்பு லண்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கிலவார இதழ் ஒன்று இத் தாக்குதலை வர்ணித்திருந்தது.

சுதேச பத்திரிகை, விடுதலைப் புலிகளுடன் பேச முனைந்திருக்கும் பிரதமர் சந்திரிகா, பலமான நிலையில் நின்று பேச வேண்டும்; படைகளைப் பலவீனப்படுத்திவிடக்கூடாது என்றும் கோரினை கூறியிருந்தது!

படைகளைப் பலவீனப் படுத்தாமல், பலமான நிலையில் நின்றே அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்ற இந்த நிலைப்பாடு பத்திரிகைகளில் மட்டுமன்றி, அரசாங்க அதிகாரிகளிடமும், ஆதரவாளர்களிடமும் பரவலாகக் குடிகொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இது சமாதானம் வேண்டாம் என்ற போர்வையில் தமிழர்களின் இராணுவ பலத்தை உடைக்கும் உத்தியாகும். மிகப் பெரிதாக எந்தத் தாக்குதலையும் நடத்தாமல், நாளாந்தம் மெதுமெதுவாக, சிறிய அளவில் சேதங்களை, பாதிப்புகளை உண்டாக்கித் தாம் பலமான நிலையில் நிற்பதாகக் காட்டிக் கொள்ளும் சூழ்ச்சியாகும்; தந்திரமுமாகும்.

இந்தத் தந்திரங்கள், உத்திகளுக்கெல்லாம் பதிலடி கொடுப்பது போல, கடந்த சனிக்கிழமை நள்ளிரவு விடுதலைப் புலிகள் தமது இராணுவ பலத்தை எடுத்துக் காட்டியுள்ளார்கள். ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான பாரிய போர்க்கப்பல் ஒன்றை மூழ்கடித்துள்ளனர்!

இந்தத் தாக்குதல் வெறும் பதிலடியாக மட்டுமன்றி, அரசு பலமான நிலையில் நின்றுதான் பேச வேண்டும் என்ற சந்திரிகாவைத் தப்பான வழிக்கு இட்டுச்செல்ல முயலும் தீய சக்திகளுக்கும் ஒரு பேரடியுமாகும். மிகக் குறிப்பாக, போர் நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கு தடையாக இருக்கும் படை உயர் அதிகாரிகள் பலருக்கும் பாடம் புகட்டுவதாகும்.

சமாதானத்தை நாடும், நிர்வகிக்கத் தேடும் பேச்சுவார்த்தை முயற்சிக்குச் சமுக நிலை தேவை. அந்தச் சமுக நிலை தோன்றுவதற்கு போர் நிறுத்தம் அவசியம். உள்நோக்கம், சூழ்ச்சி என்பன இல்லாமல் சுத்தமான, நியாயமான சித்தத்துடன் செயற்படும் எவரும் பேச்சுவார்த்தைக்கு யுத்த நிறுத்தம் அவசியம் என்பதனை ஏற்றுக் கொள்வர்.

பேச்சுவார்த்தை நடக்கும் போது, அரசாங்கப் படைகளும் சரி விடுதலைப் புலிகளும் சரி இராணுவ நடவடிக்கைகள், தாக்குதல்களில் தொடர்ந்து ஈடுபட்டால் அது அர்த்தமற்றதாகி விடும். இதனை தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன், பிரதமர் திருமதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எழுதிய கடிதத்தில் தெளிவாக வலியுறுத்தி இருந்தார்.

ஆனால் ஒரு வாரம் கடந்தும் அரசு அது விடயத்தில் உரிய கவனம் செலுத்தாமல் ஆறப்போட்டிருக்கும் போது, படையினர் விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் சிறு கட்டத் தாக்குதல்களில் ஈடுபடுகின்றனர். இது நிறுத்தப்பட வேண்டும். போர் நிறுத்தம் கொண்டுவரப் படவேண்டும் என்பதே கற்பிக்கத் தாக்குதலின் தாரதம்மியம்!

"அடிக்கும் போது திருப்பி அடிப்பதே எங்கள் பாப்பு, அணைக்கும் போது கட்டியணைப்பதே எங்கள் கொள்கை" என்ற புலிகளின் கொள்கையைப் புரிந்து கொண்டு அரசு சமாதானத்துக்கான சூழ்நிலையைக் கெடுக்காமல் யுத்தநிறுத்தத்தை நடத்த வேண்டும்.

தீர்வு ஒன்று ஏற்பட்டால்

தமிழீழ நிர்வாக கட்டமைப்புகள் மேலும் விரிவுபடுத்தப்பட முடியும்

அன்ரன் பாலசிங்கம் தகவல்

கொழும்பு, செப் 22

தீர்வு ஒன்று காணப்பட்டவுடன் தமிழீழ நீதிமன்றம், காவல்துறை போன்ற நிர்வாகக் கட்டமைப்புகள் அரசின் ஆசீர்வாதத்துடன் அங்கீகரிக்கப்பட்டு அவை மேலும் விரிவுபடுத்தப்பட முடியும்.

விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த "இந்திய எக்ஸ்பிரஸ்" செய்தியாளர் நீற்றா சௌஸ்தியாவிடம் முன்னுண்டவாறு தெரிவித்தார்.

இச் செய்தியை இந்திய எக்ஸ்பிரஸ் தனது செப்ரெம்பர் 11 இதழில் வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாக்கியுள்ள நீதிமன்றம், காவல் துறை போன்ற நிர்வாகக் கட்டமைப்புகளுக்கு என்ன நடக்கும்? என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே டாக்டர் பாலசிங்கம் முன்னுண்டவாறு தெரிவித்தார்.

"ஸ்திரமான யுத்த நிறுத்தம் ஒன்றையே நாம் விரும்புகின்றோம். திம்புப் பேச்சுகளின்போதும் பின்னர் கொழும்புப் பேச்சுக்களின் போதும் இடம்பெற்ற யுத்த நிறுத்த மீறல்கள் மீண்டும் இடம்பெறக்கூடாது" என்றும் அவர் தெரிவித்தார்.

பிரேமதாஸா அரசின் காலத்தில் இடம்பெற்ற போன்ற நம்பிக்கைத் துரோகம் மீண்டும் இடம்பெறக் கூடும் என்றும்—

விடுதலைப் புலிகளை நம்ப முடியாதென்றும் தென்பகுதியில் பொதுவான உணர்விருப்பது பற்றி கேட்டதற்கு—

"இந்திய அமைதிப் படைக்கு எதிராகவும், இந்திய அமைதிப்படை உருவாக்கிய தேசிய தமிழ் இராணுவத்துக்கு எதிராகவும் சண்டையிட விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆயுதங்களைத் தந்தவரத் தவிர, சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதி பிரேமதாஸா கொஞ்சமும் விரும்பவில்லை. அதனால்தான் அப் பேச்சுகள் முறிந்தன" — என்று டாக்டர் பாலசிங்கம் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதி விடுதலைப்புலிகள் இயக்கம் தான் என்று பிரதமர் அங்கீகரித்திருப்பதை டாக்டர் பாலசிங்கம் கவனித்ததாகக் கூறினார்.

தமிழ் குழுக்கள்

சமாதானப் பேச்சுகளில் ஏனைய தமிழ்க்குழுக்கள் பங்குபற்றுவது பற்றி கருத்து வெளியிடுகையில் —

"அவர்களுடன் பிரதமர் பேச முடியும். அது எங்களுடைய பிரச்சினை அல்ல; ஆனால் எம்முடனான பேச்சுவார்த்தை தனியாகவே இடம் பெறும்" — என்றார் டாக்டர் பாலசிங்கம்.

இப்போது முக்கியமானது, வடக்கிற் அமைதிலையும், இயல்பு நிலையையும் ஏற்படுத்துதலே. அதன் பின்னர் பொருளாதாரத்தடை முற்றாக நீக்கப்படும். யூகாரி — சண்டிப்பிடி பாதை திறக்கப்பட வேண்டும். இதற்கு வசதியாக யூகாரி இராணுவ முகாமை மூடவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வன் கருத்து

யுத்த நிறுத்தத்தினால் விடுதலைப் புலிகளுக்குத்தான் இழப்பு ஏற்படும் என்று விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் திரு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

"இராணுவம் தொடர்ந்தும் தமது படையினருக்கு பயிற்சி வழங்கி பலப்படுத்தும். கூடுதல் போர்த் தளபாடங்களை அவர்கள் பெறுவர். ஆனால் நாம் எமது பிரதான ஆயுதமான விநியோகங்களை இழக்கின்றோம். எமக்கு ஆயுதங்களை விநியோகிப்பவர்கள் இராணுவத்தினரே ஆவர்" — என்று கூறிய திரு. தமிழ்ச்செல்வன் —

பூகரி இராணுவமுகாம் அழிப்பின்போது விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், வெடிபொருள்களை படியங் போட்டுக் காட்டினார் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, யுத்த நிறுத்தம் காரணமாக போர் முனையில் இருந்து நகர்த்தப்படும் விடுதலைப் புலிகள் போராளிகள் தங்கள் தொடர்புகளையும் இழந்து விடுவர் என்றும் திரு. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

முந்திய ஆட்சியினர் போலன்றி, பிரதமர் சந்திரிகா தமிழர்களின் அபிலாஷைகள் மற்றும் நம்பிக்கைகள் பற்றி உணர்ந்துள்ளார். என்று திரு. தமிழ்ச்செல்வனும், டாக்டர் பாலசிங்கமும் தெரிவித்தனர். (ஐ-எ)

அமைப்பாளர் பதவி விலகினார்

கொழும்பு, செப் 22

முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் பேக்கர் பெரேரா ஐக்கிய தேசியக் கட்சியின் அத்தனகல அமைப்பாளர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

அவரின் இடத்திற்கு முன்னாள் எம்.பி டொனால்ட் நிஸநாயக்கா, பண்டித சொன்விரன ஆகியோர் தற்காலிக மாக நியமிக்கப்பட்டனர். (ஐ-எ-6)

தீர்வு முயற்சி தொடரும்போது படையினர் தாக்குதல் நீடிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

ஸ்ரீலங்காவின் புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு சமரசப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுதான் முயற்சிக்கும் ஆதேவேளையில் ஸ்ரீலங்கா படைகள் தொடர்ந்தும் தமது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டவாறு உள்ளனர் என்று "புலிகளின் குரல்" அறிவித்தது.

கடந்த 15ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திக் மாவடி முன்மாரி பிரதேசத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை கற்றிவளைத்த இராணுவத் தினரும்கானா மோதலில் 8 விடுதலைப்புலி வீரர்கள் வீர மரணம் அடைந்தனர்.

கடந்த 14ஆம் திகதி வான் படைக்குச் சொந்தமான இரண்டு பொம்மர்கள் மணலாறில் தாக்குதலை நடத்தின.

அத்துடன் தொடர்ச்சியாக வடமராட்சி கடற்பரப்பில் இருந்த கடற்றொழிலாளர்கள் மீதும், கரை யோரப் பகுதிகள் மீதும் கடற்படை கடும் பிரங்கித் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. இத்தாக்குதலில் அப்பாவித் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார்.

ஸ்ரீலங்காவின் முப்படையினரும் மேற்கொண்டுவரும் தாக்குதல் நடவடிக்கைகளில் இருந்து சமரச சூழலை கொண்டுவருவதற்கு வேண்டிய போர் நிறுத்தத்தை மேற்கொள்ள ஸ்ரீலங்காப் படைகள் தயங்குகின்றன என செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடற்கரும்புலிகள் கற்பிட்டிக் கடற்பகுதியில் போர்க்கப்பலை அழித்து மூழ்டித்த நிகழ்வானது பேச்சுவார்த்தைக்குரிய சமரச சூழ்நிலைக்கு போர் நிறுத்தம் அவசியமானதெனும் உண்மையை மீண்டும் வலியுறுத்துவதாக உள்ளது.

அண்மையில் விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் பி. பி. சிக்கு வழங்கிய பேட்டியில், போர்ச் சூழலை பேச்சுவார்த்தைகளை பாதிக்கும் என அழுத்திக் கூறியிருந்தார்.

இவ்வாறு "புலிகளின் குரல்" செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலின் பின் அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, செப் 22

ஜனாதிபதி தேர்தல் முடிந்த பின்னர் பிரதமர் சந்திரிகா அமைச்சரவையை மாற்றி அமைப்பார்.

பெரு ஐ. மு. வேட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே ஐலண்ட் இந்த தகவலை வெளியிட்டிருக்கிறது.

அமைச்சர் பதவி கிடைக்காதிருப்பவர்கள் இம் மாற்றத்தின் போது கவனிக்கப் படுவார்கள் என்று பிரதமர் உறுதியளித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் பிரதி அமைச்சர் பதவி கிடைக்காதவர்கள் வேதனமடைந்துள்ள எம்.பிக்களுக்கு அரசுப் பிரதிநிதிகளாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தின புரிமாவட்டம். பி. டபிள்யு டி. ஜே. செனவிரத்னா சர்வதேச நாடாளுமன்ற மாநாட்டில் கலந்து கொள்ள டென்மார்க் சென்றுள்ளார்.

கண்டி மாவட்ட எம் பி எஸ்மன் கிரியெல்ல எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் கனடா செல்லவிருக்கிறார்.

போராட்ட வரலாற்றில் திருப்பம் ஏற்படுத்திய திலீபனின் தியாகம்

செப். கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் விடுத்த செய்திக் குறிப்பு இங்கே பிரசுரமாகிறது.

செப். கேணல் திலீபனின் தியாகம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

எமது வரலாற்று எதிரியான சிறிலங்கா நாட்டுக்கு அடுத்தபடியாக எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு எண்ணிய இன்னொரு சக்தியான இந்திய அரசுக்கு பாடம் புகட்டிய ஓர் போர் வடிவம்: இதனால் உலகத்திலே இந்திய அரசின் முகமூடி கிழித்தெறியப்பட்டு உண்மை நிலை வெளிக் கொண்டு வரப்பட்டதற்கு திலீபன் தொடுத்த இந்தப் போர் வடிவம் மிகவும் முக்கியமானதொன்றாக அமைந்தது.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை திசை திருப்பவும், நசுக்கவும் திட்டமிட்டு எமது மண்ணில் கால் பதித்த இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக அமைந்த திலீபனின்போர் வடிவத்தால் இந்திய அரசு தலை குனிந்தது.

மானவன் என்ற நிலையில் இருந்து காதலின் தேவையைக் கருத்தில் கொண்டு தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட திலீபன் எமது தேசிய தலைவரின் சிந்தனைகளை மக்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் விதைப்பதில் தீவிர மாக செயற்பட்டார். இவ்வாறான போராளியாக, தியாகமானது மாணவ சமுதாயத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் நினைவு கூரப்படும். வேளையில் எமது மண்ணில் காலூன்றிய இந்திய ஆக்கிரமிப்பு படை அகற்றப்படும் எமது வரலாற்று எதிரியான சிங்கள ஆக்கிரமிப்புப் படை முகாம்கள் பலவும் தகர்க்கப்பட்டும் எமது தமிழீழ தாய்நாட்டின் தனியரசு கட்டியமைக்கப்பட்டும் வருகின்றது.

தாய்நாட்டின் விடுதலைக்காக தன்னுயிர் ஈந்த திலீபனின் நினைவு நாட்களில் தமிழீழ மாணவர்கள் உணர்வு பூர்வமாக நினைவு நிகழ்வுகளை நடாத்தி கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

[illegible] மலர் தூவி அஞ்சலி செலுத்தி 30 நிமிட நேர நினைவு நிகழ்வுகளை ஒவ்வொரு நாளும் நடத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்படி பதினொரு நாட்களில் ஒரு நாளில் வகுப்புகளைப் பொறுத்து காலையில் ஆரம்பித்து பாடசாலையில் முழுநேர நினைவு நிகழ்வுகளை நடத்துமாறும் பாடசாலைகளில் சிரமதான வைபவங்களையும் பாடசாலை அமைந்துள்ள வட்டத்தில் குறிக்கப்பட்ட ஒரு இடத்தில் நடத்தப்படுகின்ற ஆலயங்களில் மாவீரர் தினத்தில் ஒரு நாள் வாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளுமாறும். இறுதி நாளான 26-09-1994 அன்று கோட்ட மட்டத்தில் நடத்தப்படுகின்ற நினைவு நிகழ்வுகளில் மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நடைபெறவுள்ள உண்ணா விரத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 22

தியாகி திலீபனின் நினைவாக இன்று உண்ணாவிரத நிகழ்வுகள் இடம் பெறும் இடங்கள் மற்றும் அவற்றில் பங்கு பற்றுகின்ற பொது அமைப்புகளின் விவரங்கள் வருமாறு:-

★ மந்திகை அம்மன்கோயிலடி — மந்திகை மிருசுவில் திருநிலையம்.

★ துன்னாலை கலிகைக் கந்தசுவாமி கோயில் — விக்கினேஸ்வராக் கல்லூரி, திருநெறியக்கல்லூரி.

★ உடுப்பிட்டி நாவலடி வைரவர் கோயிலடியில் — முத்த விநாயகர், ஜோதி, இராஜராஜ ஜி, அம்பிகை சனசமூக நிலையங்கள், உடுப்பிட்டி மாதர் சங்கம், உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி.

★ நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் — சாரணர் இயக்கம் செஞ்சிலுவைச் சங்கம், ஜோண்ஸ் அம்புலன்ஸ் மக்கள் நலன்காக்கும் கழகம், அரசு சார்பற்ற நிறுவனம், நல்லூர் பிரதேச சபை, வர்த்தகர் சங்கங்கள்.

★ சுன்னாகம் கிழக்கோயிலடியில் — மகாஜனம் பெருமாளடைவு முகாம், கொம்பனிப்புலம் முகாம், கலைவாணி ச. ச. நிலையம், தென்தமிழ் ச. ச. நிலையம், அளவெட்டி வதிரி பயிற்சி நிலையம், திலீபன் முகாம், நீதியான் முகாம்.

★ வடக்கம்பரை அம்மன் கோயிலடியில் — வட்டு. சிற்றூர் மக்கள்.

★ ஆனைக்கோட்டை முத்தமிழ்நாயகர் கோயிலடியில் — ஆனைக்கோட்டை சிற்றூர் மக்கள்.

★ நீர்வேலி கந்தசுவாமி கோயில் முன்றலில் — புத்தகவட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம், புத்தூர் பஞ்சலிங்க வித்தியாலயம், வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம், நவக்கிரி அ. மி. த. க. பாடசாலை, புத்தூர் மாதர்சங்கம், வதிரி பயிற்சி நிலையம், உதயத்திக்குழு.

★ நீவகக்கோட்டம் — புங்குடுதீவு மகாவித்தியாலம், புங்குடுதீவு கப்பிரமணிய மகா வித்தியாலயம், நீதிவான் குடியிருப்பு.

★ வதடிச் சந்தியில் — பகுதி ச. ச. நிலையம், வதடி வடக்கு ச. ச. நிலையம்.

★ சாவகச்சேரி மணல் குணாய்பிள்ளையார் கோயிலடியில் - சரசாலை, மட்டுவில், மீசாலை சனவைத் தொழிலாளர் சங்கம்.

★ கொடிகாமம் ரயில் நிலையத்துக்கு அருகில் — கலிபன், நிதி ச. ச. நிலையம், அல்வாரை வடக்கு, கொடிகாமம் வடக்கு ஐயனார்கோயிலடி, போர்க்குடியேற்றம் திட்டம், காவி கோயில் குடியிருப் , மக்கள்.

★ பளை இரணைடைக்கேணி அம்மன் கோயிலடியில் — வன்னாரிக்கேணி, தம்பகாமம் மக்கள்.

யாழ். ஆஸ்பத்திரியில் புதிய பாதுகாப்பு நடைமுறை அமுல்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ் போதனா வைத்திய சாலையில் கடமை புரிவோரைச் சந்திக்க உட்செல்வோர் ஆக்கு கிழக்காக ஆன்றி வேறு நேரங்களுக்காக உட்செல்வோர் சம்பந்தமாக புதிய பாதுகாப்பு விதிகள் அமுலுக்கு வந்துள்ளன.

உட்செல்பவர் என்ன விடயமாக, அல்லது எவரைச் சந்திக்கச் செல்கிறோம் என்பன பற்றிய விபரங்கள் பதிவுப் புத்தகத்தில் அடைவாக அக்கடை பொறுப்பேற்றப்படுகிறது.

உள்ளே செல்பவர் குறிப்பிட்ட நேரத்தில் வெளியேற வேண்டும்.

வெளியே வரும் போது அவரின் அடையாள அட்டை மீள அளிக்கப்படும்.

இதற்கான பதிவுகளை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் செய்து கொள்ளலாம்.

யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் பணிப்பின் பேரில் கடந்த வாரம் முதல் இந்த நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (இ-15-17)

பேச்சு பற்றி தளபதிகளுடன் அமைச்சர் ரத்வத்த ஆராய்வு

கொழும்பு, செப். 23

பாதுகாப்பு பிரதி அமைச்சரும் எரி பொருள் மின்சக்தி, நீர்ப்பாசன அமைச்சருமான லேனா அனுருத்த ரத்வத்த கடந்த வெள்ளிகிழமை முப்படைத் தளபதிகளையும் சந்தித்து, விடுதலைப் புலிகளுடனான உத்தேச சமாதானப் பேச்சுக் குறித்து ஆராய்ந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமிட்டன் வனசிங்க, இராணுவத் தளபதி ஜெறிடிசில்வா, விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க, கடற்படைத்தளபதி மொஹான், சமல்கோர ஆகியோர் பங்குபற்றினர்.

உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தை இழுத்தடிக்க அரசு விரும்பவில்லை என்றும்—

அரசியல் தீர்வை சில கற்றுப் பேச்சுவார்த்தையே மூலம் முயற்சிப்பதே அரசின் எண்ணம் என்றும் -

"சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

புலிகளின் குரல் வானொலியில்

22 — 09 — 1994
வியாழன் இரவு

★ 8-01 — தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — கி. வண்ணமா எழுதிய "தீபவலி எழுந்த கதிர்".

★ 8-20 — உலகப்போரும் உயர்வோரும் — நிகழ்ச்சியில் 'நன்னீர் உவராவதற்கு குடாவலமைப்பும் ஒரு காரணம்" தனி நடப்பு

8-30 — செய்திகள்

★ 8-40 - கற்பிட்டிக் கடற்பரப்பில் போர்க்கப்பல் தகர்க்கப்பட்டதை யொட்டி சிறப்பு நிகழ்ச்சி

23 — 09 — 1994
வெள்ளி காலை

★ 7-02—மாவீர வணக்கம்

★ 7-15 - மணியாரம்

★ 7-30—செய்திகள்

★ 7-35—பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — நல்லூர் ஈழதாசன் குழுவினர் தயாரித்த [வழங்கும் 'தியாக தீபம் திலீபன்' கவிதை

ஜனாதிபதி முறையை ஒழிக்க தொண்டமானும் ஆதரவு!

கொழும்பு, செப். 22

நிறைவேற்று ஜனாதிபதி முறையை நழிப்பதற்கு இ. தொ. கா. தலைவர் தொண்டமான் தற்போது ஆதரவு தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஏற்பாடுகளை அரசமைப்பில் இணைத்துக் கொள்ளும் வட்சத்தில், நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படுவதைத் நாம் ஆதரிக்கப் போவதாக திரு. தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

ஆரம்பத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர வேண்டும் என்று திரு. தொண்டமான் கூறி வந்தார்.

ஜனாதிபதி பிரேமதாஸா மீது அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை கொண்டு வரப்பட்ட பின்னர் நாம் நிறைவேற்று ஜனாதிபதி முறை மீது நம்பிக்கையிழந்து விட்டதாகவும் தொண்டமான் கூறியிருக்கிறார்.

கடந்த பொதுத்தேர்தலில் வெளிவு செய்யப்பட்ட புதிய நாடாளுமன்றத்தை அங்குரார்ப்பணஞ் செய்து கொள்கை விளக்க உரையை நிகழ்த்தவும் ஜனாதிபதி விஜேதுங்க மறுத்ததுடன் —

பிரதமர் சந்திரிகாவையே கொள்கை விளக்க உரையை நிகழ்த்தும்படி ஜனாதிபதி கேட்டுக் கொண்டார் என்றும் திரு. தொண்டமான் தெரிவித்தார். (ஐ-எ)

நீதி நிர்வாக உண்ணாவிரதம்

தியாகி திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக நீதி நிர்வாகத்துறையில் கீழ் இயங்கும் நீதிமன்றங்களின் நீதியாளர்கள், சட்டவாளர்கள் பணியாளர்கள் கலந்து கொள்ளும் உண்ணா விரதமும் கவன நிகழ்ச்சிகளும் எதிர்வரும் சனிக்கிழமை 24 ஆம் திகதி காலை 8- மணிக்கு நீதி நிர்வாகத்துறையின் நடுவப் பணியகத்தில் நடைபெற உள்ளன. (இ)

நடைமுறை அமுல்

ஜனாதிபதி முறையை ஒழிக்க தொண்டமானும் ஆதரவு!

நீதி நிர்வாக உண்ணாவிரதம்

ரஞ்சனின் சிலை விசமிகளால் சேதம்

கொழும்பு, செப். 22

"ரேமதாஸா அரசில் பாதுகாப்பு பிரதி அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜரத்தினாவின் சிலையை விஷமிகள் சிலர் சேதமாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

தெரணியலையில் கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது. சிலையின் முகமும் ஒரு கையும் சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது. (ஐ-எ-6)

மரண அறிவித்தல்கள்

திருமதி பங்கஜம் பொன்னம்பலம்

நல்லூர் சட்டநாதர் வீதியைச் சேர்ந்த திருமதி பொ. பங்கஜம் 15-09-1994 கொழும்பில் காலமானார்.

அன்னார் ஆறுமுகவேலாயுதர் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், இந்திரா (ஓமான்) அமரர் யோகநாதன், திருமதி சரோஜினிதேவி (லண்டன்) [மக்கள் வங்கி, வவுனியா] திருமதி தயாமேனகா, டாக்டர் பொ. சரவணபவன் [கொழும்பு பெரியாஸ்பத்திரி] ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. சிதம்பரநாதன் (ஓமான்), திரு. சந்திரசேகரம், திரு. தருமரட்ணம், திருமதி சஜெயந்தி, ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை (19-9-94) பிற்பகல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. தருமரட்ணம்
(மருமகன்)

81 ஆரச வீதி,
நல்லூர். (32994)

கந்தசாமி இந்திரகுமார்

இந்திரகுமார் 18-09-1994 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

இவர் V. கந்தசாமி - பரமேஸ்வரி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், அனுஷியாவின் அன்புக் கணவரும், ரமணாவின் அன்புத் தந்தையும், சத்தியசீலன் [Canada], சத்தியானந்தன் [Canada], சிறிரங்கன் [Kenya] ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-09-1994 திங்கட்கிழமை கனடாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. கந்தசாமி
[தந்தை]

21, முதலாம் ஒழுங்கை,
பிரவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

K. Sathiyaseelan,
154, William Honey Cresent,
Markham,
Ontario L3S 2L5,
CANADA.

[7925]

கந்தையா சிவஞானம்
(பிரதம சிறாப்பர்)

உரும்பராய் வடக்கைச் சேர்ந்த கந்தையா சிவஞானம் 20-9-94இல் காலமானார் இவர் மங்கையற்கரசியின் அன்புக்கணவரும், சிவகுமாரன், சிவசேகரன், சிறாம், சிவசங்கரி, சிவதாசன் ஆகியோரின் அன்புத்தந்தையும், இராஜேஸ்வரி, ஆனந்தி, நளினி, உஷா, சரோஜினிதேவி, யோகேஸ்வரி, பாலச்சந்திரன், நாகேஸ்வரி, ஜெயதீஸ்வரி, குகதாஸ் ஆகியோரின் மாமனாருமாவார்; சிவபாலன், கிமோக்கிவாருபன், சிவமைந்தன், சிவநந்தா, கஞ்சுதன் ஆகியோரின் பேரனுமாவார்;

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 22-9-94 பி.ப. 3 மணிக்கு உரும்பராய் வடக்கில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

கற்பகப்பிள்ளையார் வீதி,
உருப்பராய் வடக்கு (33003)

திருமதி முத்துத்தம்பி இராசம்மா
(வேலணை)

வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முத்துத்தம்பி இராசம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், நகுலாம்பிகை காலஞ்சென்ற சண்முகநாதன் (கதிர் மண்டைதீவு மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற வைரசிங்கம், தியாகராஜா (கணக்காளர், விமான நிலையம் கட்டுநாயக்கா), காலஞ்சென்ற பஞ்சவிங்கம், வசந்திமாலா (ஆசிரியர் / யா / வேலணை துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னையா (ஓய்வுநிலை ஆசிரியர்), பிறேமாவதி (ஆசிரியர்), தையல்நாயகி, ரதிதேவி, சிவபாலன் (பொறியியலாளர் கல்வித் திணைக்களம் வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், வேதவல்லி, ஞானானந்தன் (ஜேர்மனி), சதானந்தன் (இந்தியா), கனகவல்லி, ஆனந்தவல்லி (மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை), கருணானந்தன், விவேகானந்தன் (ஜேர்மனி), அருளானந்தன் (3 ஆம் வருடம் விஞ்ஞானபீடம் உயிரியல் யாழ் பல்கலைக்கழகம்), ஸ்ரீவல்லி, இமயவர்மன், உதயகுமாரி, ரவிவர்மன், நந்திவர்மன், சுதாகரன், பாஸ்கரன், சசிதரன், ரூ 9, திவாகரன், நித்திலா, மிதிலா, மதுரா, கௌசி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு ப. 10 00 மணிக்கு 34, சப்பறவீதி இல்லத்தில் நிகழ்ந்து பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோமபந்தன மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ அருளானந்தன் (பேரன்)

திருமதி சுப்பிரமணியம் நாகரெத்தினம்

நாவடி தெற்கு கொக்குவிலைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் நாகரெத்தினம் 21-09-94 காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற P. W. D. ஓவசியர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சண்முகராதேவி, சரோஜினிதேவி, ஞானவிஸ்வரதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சு. செல்வத்துரை. (அரசாங்க ஒப்பந்தகாரர்) க. சிவஞானம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், திருமதி த. அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ந. இலவேளியாரும், இ மகேஸ்வரலிங்கம், க. இராசலிங்கம் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 22. 09. 94 மு.ப 11.00 மணியளவில் நாவடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. செல்லத்துரை
(சகோதரன்)

(33008)

வடபகுதிக்கு செல்ல

சந்திரிகா காட்டும் அவசரம் 'மேனிமினுக்கு' நடவடிக்கை

'சண்டேலீடர்' கட்டுரை

கொழும்பு, செப். 22

நம்பத்தகுந்தமையான, செட்டியான நிகழ்ச்சி அட்டவணை ஒன்றில்லாமல் பிரதமர் சந்திரிகா அவசரப்பட்டு யாழ்ப்பாணம் செல்வது ஒரு 'மேனாமினுக்கு' நடவடிக்கையாகவே இருக்கும்.

"சண்டேலீடர்" ஆங்கில வார இதழில் "பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முன்னுநிலமைகளும், சவால்களும்," என்ற தலைப்பிலான கட்டுரையில் திரு. நிஸ்ஸ ஜெயநிலை என்பவர் முன்வண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடிதமொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

விடுதலைப் புலிகளுடன் பேச்சை நடத்த முன்வந்திருப்பது இன்றைய அரசாங்கம் எடுத்துள்ள ஸ்லாகிக்கத்தகும் நடவடிக்கையாக அமைகின்றது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரியல் தீர்வு காணும் தனது விருப்பத்தை இன்றைய அரசு நாட்டுக்கு எடுத்துக்காட்டி உள்ளது.

இது தெளிவாக அறிவு பூர்வமாகவும், பக்திரமாகவும் ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கட்டத்தில் வடபகுதிக்கு பிரதமர் அவசரமாக உத்தியோக விஜயம் ஒன்றை மேற்கொள்வது நீண்டகால நலனைப் பொறுத்தவரையில் எதிர்விளைவைத் தரக்கூடும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு ஏதாவது ஆச்சரியப் படக்கூடியதாக செய்யவேண்டும் என்ற உந்துதல் நிறைய இருப்பினும் —

நாட்டின் பாரிய நலனைக் கருதி இந்த உந்துதல் உணர்வு கட்டுப்படுத்தப்படவேண்டும்.

நம்பத் தகுந்ததும் செட்டியானதுமான நிகழ்ச்சி அட்டவணை ஒன்று இன்றி பிரதமர் வடபகுதி விஜயம் மேற்கொள்வது, விடுதலைப் புலிகளுக்கு தவறான சமிக்ஞையை [காட்டுவதாக மாறும்] மாறும் அமையும். மற்றும் தொப்பிக்குள் இருந்து முயல் வெளியே இழுத்து எடுக்கும் விதத்தில் அரசு ஈடுபடுகிறது என்ற தவறான எண்ணத்தை தென்பகுதியிலும் இது உருவாக்கும்.

இந்நிலை ஏற்படுமானால் இது பிரதமரின் நம்பகத் தன்மையைப் பாதிப்பதுடன், அவரது அரசியல் முதலாளித்வத்தையே கரையச் செய்துவிடலாம்.

இவ்வாறு அக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவை குத்தகைக்கு பெற ஜெயலலிதா வலியுறுத்து

கொழும்பு, செப். 22

இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு ஓர் இறுதித் தீர்வாக கச்சதீவை இலங்கையிடம் இருந்து முடிவற்ற குத்தகையில் பெற்றுக் கொள்ளுமாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

சமீபத்தில் நடந்த தேர்தல் இலங்கை அரசியலில் ஒரு மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. எனவே ஓர் முடிவற்ற குத்தகையில் கச்சதீவைக் கோருவதற்கு இந்தியாவுக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இந்திய அரசினால் நிச்சயமாக இதனைச் செயற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

செல்லச்சாமி- சந்திரசேகரன்:
யானை மீது கொசுக்கள் என்கிறார் தொண்டா

கொழும்பு, செப். 22

செல்லச்சாமி புதிய தொழிற்சங்கம் ஒன்றை அமைத்திருப்பதும், மலையக மக்கள் முன்னணி எம்.பி. சந்திரசேகரன் பிரதி அமைச்சராவதும் யானையின் மீது இருக்கும் கொசுக்கள் போன்றதாகும்.

இ தொ.கா. தலைவர் தொண்டமான் முன்வண்டவாறு தெரிவித்தார்.

23 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற சந்திரசேகரன் என்ன செய்ய முடியும்? அது போன்றதுதான் செல்லச்சாமியின் விவகாரமும் இ தொ.காவின் வேலைத் திட்டத்தை சீர்குலைக்க அவர்கள் முற்படாதவரை அவர்களால் எனக்கு அச்சுறுத்தல் கிடையாது —என்றும் தொண்டமான் தெரிவித்தார். (இ-எ)

கிழிக்கப்பட்ட நிலையில் தபால்கள்

யாழ்ப்பாணம், செப். 22

"மாஹோ" கப்பலில் எடுத்துவரப்பட்ட தபால்கள் மீண்டும் கிழிக்கப்பட்ட நிலையில் வந்து சேர்ந்திருப்பதாக யாழ். பிரதம தபால் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

307 தபால் பொதிகள் இக் கப்பலில் வந்து சேர்ந்ததாகவும் இவை நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து யாழ் பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டு தரம்பிரிக்கப்பட்ட சமயம் தபால்கள் அனைத்தும் கிழிக்கப்பட்ட நிலையில் இருந்ததாகவும் அவ்வதிகாரி மேலும் கூறினார்.

கொழும்பு துறைமுகத்தில் கடற்படையினர் வடபகுதி தபால்களை தொடர்ந்தும் கிழித்து சோதனை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது. (உ-17)

தீவுப்பகுதியில்

தேர்தல் விதியை மீறிய ஐ. தே. க உதவி செயலாளர்

கொழும்பு, செப். 23

யாழ். மாவட்டம் — தீவுப் பகுதியில் ஐ. தே. க உதவிச் செயலாளர் டாக்டர் ஜயந்த ஜெயவர்த்தனா தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று, தேர்தலைக் கண்காணித்து சர்வதேசஅவதானிகள் குழுவினது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

அச்சம்பவம் வருமாறு:

தேர்தல் பிரசாரங்களுக்கு அரச வாகனங்கள் பயன்படுத்தப்படுவது முற்றாகத் தடுக்கப்பட்டிருந்தும் ஐ. தே. க. உதவிச் செயலாளர் தேர்தல் நாளன்று தீவுப் பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல ஹெலிகாப்டர் ஒன்றையும் ஊர்காவற்றுறை இராணுவமுகாமைச் சேர்ந்த அமுபுலன்ஸ் ஒன்றையும் பயன்படுத்தினார்.

சர்வதேச கண்காணிப்பு குழுவின் அறிக்கை கறிபோது உதவிமேலதிகாரியான வெளியிடப்பட்டுள்ளது. (இ-எ)

ஜனாதிபதி ...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாம் ஜே.வி.பியின் சார்பில் போட்டியிட ஒப்புதலை கொள்ளப்பட்ட ஜே. வி. பி. தலைவர் ரோஹண விஜேவீரா என் மைதுனரான டாக்டர் சந்திரா பொன்னம்பேரா தெரிவித்திருக்கிறார்.

இவர் வடக்கு நிங்கள் லண்டனில் இருந்து கொழும்பு திரும்பினார் என்று அறிவிக்கப்படுகிறது.

டாக்டர் சந்திரா பொன்னம்பேரவை ஜே. வி. பி வேட்பாளராக நியமித்துள்ள தாக கூறும் அறிக்கையில் ஜே. வி. பியின் சர்வதேச செயலாளர் [illegible] நிரா கிளாரன்ஸ் [illegible] பவர் கையொப்பமிட்டுள்ளார். (உ-எ-6)

குடாநாட்டில்.....
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைய உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களும் நேற்று உண்ணாவிரத நிகழ்வில் பங்கு பற்றினர்.

உண்ணாவிரத நிகழ்வின் போது கலைப்பண்பாட்டுக்கழக உறுப்பினர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

வடமராட்சி, தெல்லிப்பழை மற்றும் குடாநாட்டின் சகல இடங்களிலும் நினைவு நிகழ்வின் நிமித்தமாக உண்ணாவிரதங்கள் இடம் பெற்றன.

பொதுமக்கள் தங்கள் வீட்டு வாசல்களில் சிறு சிறு பந்தல்கள் அமைத்து நினைவு நிகழ்வுகளை வைத்து மரணஞ்சலி தீபஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் நேற்று நிறைவு நிகழ்வாக நில்பலியின் ஊர்ப் பவனியும், காவடி ஆட்டமும் இடம்பெற்றன.

குடாநாட்டில் எங்கும் நில்பலி நினைவு கூர்ந்து எழுச்சி பரப்பரப்புடன் ஒலிக்கின்றன. [illegible] (உ-10-21-17-18-20-17)

படை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள கூறினார். கல்லமியில் யாழ் வந்து திரும்பிய அவர் பி. பி. ஸி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

தாங்கள் பலமிழந்த நிலையில் இல்லை; தாக்குதல்கள் நடத்தும் வல்லமை தங்களுக்கு உண்டு என்பதைக் காட்டவும் —

பேச்சுவார்த்தைக்கான சூழலை ஏற்படுத்த யுத்த நிறுத்தம் அவசியம் என்பதை உணர்த்தவும் —

கடற்படைக் கப்பல் மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ-6)

வடபகுதிக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அதிகாரிகளைச் சந்தித்து. வடக்குக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பாக விரிவாக ஆராய்ந்து திட்டமிட்ட பின்னர் திரு. ராஜேந்திரன் இப்போது யாழ்ப்பாணம் வந்தார்.

மின்சாரம் வழங்குவதற்கான திருத்த வேலைகளுக்கான உபகரணங்கள் மற்றும் மின் உற்பத்திக்குத் தேவையான தொழிற்நுட்ப உபகரணங்களை வடக்கே கொண்டு வருவதற்கு அனுமதி வழங்காமல் பாதுகாப்பு அமைச்சு தாமதித்து வருகிறது என்றும் —

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன் மின்சாரம் வழங்குவதற்கான வேலைகளை தொடங்க முடியும் என்றும் — திரு. ராஜேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-6)

மின்சார விநியோகம் தொடர்பான திருத்த வேலைகளுக்கு தேவையான பொருள்களின் ஒரு பகுதி கொள்வனவு செய்யப்பட்டு விட்டதாகவும் அவர் கூறினார்.

மின்சார விநியோகம், உற்பத்திக்குத் தேவையான உபகரணங்களைக் கொண்டு வர அனுமதி கிடைத்ததும் —

மன்னார் மாவட்டத்துக்கு ஒரு வாரத்திலும் —

புளியங்குளத்துக்கு மூன்று வாரங்களிலும் —

கிளிநொச்சிக்கு இரண்டு மாதங்களிலும் — நீர் மின்சாரத்தை வழங்க முடியும் என்று மின்சார சபை மதிப்பிட்டுள்ளதாகவும் திரு. ராஜேந்திரன் தெரிவித்தார்.

வாழ்ப்பாணத்துக்கு நீர்மின்சாரம் வழங்குவதற்கு குறைந்தது ஆறு மாதங்கள் தேவைப்படும். ஆகவே தான் இன்று மாற்று ஏற்பாடுகள் மூலம் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது — ஜெனரேட்டர்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து அமுற்கு முறையில் வழங்க இன்று விநியோகிக்கப்படும் — என்றும் திரு. ராஜேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-6)

யாருடைய பணம்

யாழ். நகரம் பகுதியில் சிறிய தொகைப் பணம் 21-9-94 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டவர்கள் முழுமையான விவரங்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

இல: 696
C/o உதயன்
யாழ்ப்பாணம்.
[33002]

சதுரங்கம், கரம் போட்டிகள்

கோண்டாவில் 'Y. M H A' யினால் வருடந்தோறும் மாவீரர் வாரத்தை முன்னிட்டு நடத்தும் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சதுரங்கம்
   I. 16 வயதிற்கு மேற்பட்டோர்
   II. 16 வயதிற்கு கீழ்ப்பட்டோர்
   III. பெண்கள் பிரிவுகளாகவும்
2. கரம்
   I. ஒற்றையர் ஆட்டம்
   II. இரட்டையர் ஆட்டம்

முடிவு திகதி **03 – 10 – 94**

விண்ணப்பங்கள் தினமும் காலை 10 30 - 12-30
மாலை 4-30 — 6-30
மணி வரையும் மேற் உள்ள முகவரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

கோண்டாவில் Y. M. H. A.
(அரசடிப் பிள்ளையார் முன்பாக)
[33007]

வேவிலந்தை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்
சுல்வாய்

முக்கிய அறிவித்தல்

24 - 09 - 94 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு தமிழீழ காவல்துறையின் முன்னிலையில் நடைபெற இருக்கும் புதிய நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டத்திற் கலந்து மாசி உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இடைக்கால நிர்வாக சபை

ச. பரமேஸ்வரன் — தலைவர்
இரா. சோமசுந்தரம் — செயலாளர்
ந. தாவழகன் — பொருளாளர்

(33001)

தவறவிட்டது

சென்ற 20-9-94 அன்று நல்லூரிற் பருத்தித்துறை வீதியில் நிலவு தூபிக்கும் நல்லை ஆதீன சந்திக்கும் இடையில் ஒரு தொகைப் பணம் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கருணையுடன் தொடர்பு கொள்ளவும்.

வேலவன் வியாபார நிலையம்
ஆடியபாதம் வீதி, கல்லிப்பாடு
யாழ்ப்பாணம். [33018]

மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை இளையதம்பி

நல்லூர் வடக்கு விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும், வல்லிபுரமாவும் கொண்ட கணபதிப்பிள்ளை இளையதம்பி காலமாகிவிட்டார்.

அன்னார் பிரசித்திபெற்ற கந்தாவுபெற்ற வியாபாரியும், நல்லூர் கிராமசபை முன்னாள் உபதலைவரும், ஸ்ரீ கணேசவித்தியாவிருத்திச்சங்க தொடர்பில் ஒருவருமாவார்.

இவர் வையலட்சுமியின் அன்புக் கணவரும், சோமாதேவி BA (இந்தியா), விமலாதேவி (ஜேர்மனி), பவானி, பரமேஸ்வரி, கமலாதேவி (ஜேர்மனி), டாக்டர் ஸ்ரீதரன் MBBS (லண்டன்), ஸ்ரீரங்கன் BA (லண்டன்), ஸ்ரீவரதன் (லண்டன்), கலாவல்லி, இளம்பூரணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரலிங்கம் (சட்டத்தரணி, இந்தியா), கோகேந்திரன் (ஜேர்மனி), கணேஸ், பத்மநாதன், சிவகுமாரன் (ஜேர்மனி), ஜனனி (லண்டன்), ஜனந்தி (லண்டன்), ஆனந்த ரகுபதி (லண்டன்), கிரிஸ்தரராசா, காலஞ்சென்ற குணசிங்கம், பொன்னையா-வாணர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சித்தமிகு தாமோதரனாரும், பாலசுப்புலிங்கம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-9-94) காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. பத்மநாதன்
(மருமகன்)

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (33016)

இப்பத்திரிகை நியூ உதயன் லிமிடெட்டுக்காக (பிறைவேற்) லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 293/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22 - 09 - 1994 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org